# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)

மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## சமத்துவ பொங்கல் விழா - 2025
## பற்றிய அறிக்கை

நாள் : 11.01.2025 இடம் : கல்லூரி வளாகம்

11.01.2025 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் தமிழர் திருநாளாம் சமத்துவ பொங்கல் விழா கிராமியப் பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்டது. திண்டுக்கல் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கவிஞர் விகுரா என்கிற வி.குழந்தை ராஜ், சவேரியார் பாளையம் பங்கு அருட்பணி பால்சாமி, வங்கமனத்து பங்குத்தந்தை அருட்பணி தாமஸ் ஜான் பீட்டர் மற்றும் திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி அலுவலருமான முனைவர் கருப்புசாமி ஆகியோர் இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். கல்லூரி செயலர் அருட்சகோதரி ஜோசப் செலின், கல்லூரி நிர்வாகி பர்த்தலமேயு, கல்லூரி முதல்வர் அருட்சகோதரி. முனைவர் சிறுமலர், கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி முனைவர் அமலிபுஷ்பம் ஆகியோர் இவ்விழாவிற்கு முன்னிலை வகித்தனர்.

இறைவணக்கப்பாடலுடன் விழா தொடங்கியது. வந்தாரை வரவேற்கும் விதமாக அருட்சகோதரி ஆண்டோ பிரின்ஸி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பாரம்பரிய கலை நடனம் நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தனர்கள், அருட்சகோதரிகள், அனைத்து துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவரும் பொங்கல் தயாரிக்கும் பொருட்களோடு அணிவகுப்பு செய்தனர். அருட்பணி பால்சாமி மற்றும் அருட்பணி தாமஸ் ஜான் பீட்டர் பொங்கல் பொருட்களை அர்ச்சிப்பு செய்த பின் மாணவிகள் கிராமிய முறைப்படி மண்பானைகளில் துறைவாரியாகப் பொங்கல் பொங்கினர்.

பொங்கல் பொங்கியதும் மாணவிகள் குலவையிட்டும் கும்மியடித்தும் மகிழ்ந்தனர். இறைவனுக்கும் உழவனுக்கும் நன்றி செலுத்தும் விதமாக பொங்கிய பொங்கல்களையும், கிராமிய மரபிலானப் பொருட்களையும் வைத்து அனைவரும் வழிபாடு செய்தனர்.

இவ்விழாவினை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறப்பு அழைப்பாளர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

கலை படைப்பு மிக்க அலங்காரங்கள் மற்றும் சுவையான பொங்கல் செய்த **ஆங்கிலத் துறைக்கு சுழற்கோப்பை** வழங்கப்பட்டது. **கணிதவியல் துறைக்கு** இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது.

கிராமிய விளையாட்டுப் போட்டியான **உரி அடித்தல்** போட்டியில் முதலாமாண்டு ஆங்கிலத் துறை மாணவி ஹரிணி முதல் பரிசு பெற்றார்.

கல்லூரி பற்றிய விளம்பர வீடியோ தயாரிப்பு போட்டியில் பின்வரும் மாணவிகள் பரிசுகள் பெற்றனர்.

| மாணவியின் பெயர் | துறை | பரிசு விவரம் |
|---|---|---|
| எஸ்தர் பேபி | மூன்றாமாண்டு வேதியியல் | I |
| எம்.ஜெயஸ்ரீ | மூன்றாமாண்டு கணினி அறிவியல | II |
| எக்லின் லீனா | முதலாமாண்டு வணிகவியல் | III |
| கிருபாவதினி | முதலாமாண்டு வணிகவியல் | ஆறுதல் |
| சுமானா பாத்திமா | முதலாமாண்டு ஆங்கிலம் | ஆறுதல் |

கல்லூரிப்பண்ணுடன் பொங்கல் விழா இனிதே நிறைவு பெற்றது.

Sr. [signature] 24/1/25

பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இணைவு பெற்றது)
மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## சமத்துவ பொங்கல் விழா - 2025
## பற்றிய அறிக்கை

நாள் : 11.01.2025

இடம் : கல்லூரி வளாகம்










Sr. Sra...